தினமணி

தென்னை மரங்களில் காய் உதிர்வை தடுக்க நுண்ணூட்ட உரம்

First Published : 01 Aug 2011 03:17:33 PM IST

கருங்கல்,ஜூலை 31: கிள்ளியூர் வட்டாரப் பகுதிகளில் தென்னை மரங்களில் காய் உதிர்வு பரவலாக காணப்படுவதைக் கட்டுப்படுத்த நுண்ணூட்ட உரங்களைப் பயன்படுத்த வேண்டும் என கிள்ளியூர் வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தென்னையில் மகசூலைப் பாதிக்கக்கூடிய காரணிகள் பல இருந்தாலும் ஊட்டச்சத்து குறைபாட்டால் ஏற்படும் பாதிப்புகள் முதன்மையானதாக உள்ளது.

பயிருக்குத் தேவையான தழை,மணி,சாம்பல் ஆகிய சத்துகளும் நுண்ணூட்டச் சத்துகளான மெக்னீசியம், போரான், தாமிரம் ஆகிய சத்துகளும் தேவையான நேரத்தில் அளிக்கவில்லையெனில் மகசூல் வெகுவாகப் பாதிக்கப்படும்.

இதில் போரான் குறைபாடு ஏற்பட்டால் குரும்பைகள் உதிரும், பாளையில் இளம்பிஞ்சுகள் காய்ந்து கருகி, வளர்ச்சி குன்றி காணப்படும்.

இதைக் கட்டுப்படுத்த மரம் ஒன்றுக்கு ஒரு ஆண்டுக்கு யூரியா 1.300 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 2 கிலோ, பொட்டாஷ் 2 கிலோ ஆகியவை இடவேண்டும். தென்னை நுண்ணூட்ட உரம் மரம் ஒன்றுக்கு ஒரு கிலோ அளவில் பேரூட்ட உரங்கள் இட்டு 15 நாள்கள் கழிந்தபின்னர் நீர் பாய்ச்ச வேண்டும் இவ்வாறு செய்வதால் தென்னை மரங்களில் காய்கள் உதிர்வதைத் தடுக்கலாம்.

இப்பருவம் தென்னைக்கு உரமிட ஏற்ற பருவம். எனவே, கிள்ளியூர் வட்டாரத்துக்குள்பட்ட கிள்ளியூர், கருங்கல், தொடுவட்டி ஆகிய வேளாண்மை விரிவாக்க மையங்களில் தென்னை நுண்ணூட்ட உரங்கள் இருப்பு உள்ளது.

எனவே, கிள்ளியூர் வட்டார விவசாயிகள் தென்னைக்கு இந்த உரங்களை இட்டு அதிக மகசூல் பெற்று பயனடையலாம் என்றார் அவர்.

**தோட்டக் கலைப் பயிர்களுக்கு மானிய உதவி**

First Published : 01 Aug 2011 02:36:44 PM IST

போடி, ஜூலை 31:÷தோட்டக் கலைப் பயிர்களுக்கு மானிய உதவி வழங்கப்படுவதாக போடி தோட்டக் கலை உதவி இயக்குநர் வி.கெர்சோன் தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

÷இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: போடி வட்டாரத்தில் தேசிய தொட்டக் கலை இயக்கத் திட்டத்தின் மூலம் தோட்டக் கலைப் பயிர் சாகுபடிக்கு மானியம் வழங்கப்படுகிறது.

÷இத்திட்டத்தின் கீழ் ஒரு ஹெக்டர் மா பயிருக்கு முதலாமாண்டு ரூ.9 ஆயிரத்து 900, 2-ம் ஆண்டு ரூ.3 ஆயிரத்து 330 மானியம் வழங்கப்படும். நெல்லி பயிருக்கு முதலாமாண்டு ரூ.10 ஆயிரத்து 503, 2-ம் ஆண்டு 3 ஆயிரத்து 501 மானியம் வழங்கப்படும். கொட்டை முந்திரிக்கு முதலாமாண்டு ரூ.12 ஆயிரம், 2-ம் ஆண்டு ரூ.4 ஆயிரம் மானியம் வழங்கப்படும்.

÷தென்னையில் ஊடுபயிராக கோகோ பயிரிடுவதற்கு முதலாமாண்டு ரூ.12 ஆயிரம், 2-ம் ஆண்டு ரூ.4 ஆயிரமும், உதிரி மலர்களாகிய குண்டு மல்லி, கோழிக்கொண்டை, கனகாம்பரம், சாமந்தி போன்ற பயிர்களுக்கு ரூ.12 ஆயிரமும், மிளகாய் சாகுபடிக்கு ரூ.12 ஆயிரத்து 500-ம் மானியமாக வழங்கப்படும்.

÷பழைய தோட்டங்களைப் புதுப்பிக்க மானியமாக மா பயிருக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.15 ஆயிரமும், கொட்டை முந்திரிக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.15 ஆயிரமும் மானியம் வழங்கப்படும்.

÷தோட்டக் கலைப் பயிர்களில் உற்பத்தி திறனை அதிகரிக்கும் வகையில் நெருக்கி நடும் முறையில் மா சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டருக்கு முதலாமாண்டு ரூ.22 ஆயிரத்து 200-ம், 2-ம் ஆண்டு ரூ.7 ஆயிரத்து 400-ம், திசு வாழை சாகுபடிக்கு ரூ.31 ஆயிரத்து 202-ம், கிழங்கு மூலம் வாழை சாகுபடிக்கு ரூ.16 ஆயிரத்து 867-ம் மானியம் வழங்கப்படும்.

÷தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் துல்லிய பண்ணையம் முறையில் வாழை மற்றும் காய்கறிகள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப்பாசனம், உரம், விதை ஆகியவற்றுக்கு ஒரு ஹெக்டருக்கு ரூ.65 ஆயிரம் வழங்கப்படும்.

÷இந்த மானிய உதவிகளை பெறுவதற்கு விவசாயிகள் தங்கள் நிலத்தின் சிட்டா, அடங்கல், புகைப்படம், குடும்ப அட்டை நகல், வங்கிக் கணக்கு பாஸ் புத்தகம் ஆகியவற்றுடன் அந்தந்தப் பகுதி வேளாண்மை உதவி அலுவலர்கள், தோட்டக் கலை அலுவலர்களை அணுகலாம் என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**"50,000 விவசாயிகளின் வயல்களில் மண் மாதிரிகள் ஆய்வு செய்ய இலக்கு'**

First Published : 01 Aug 2011 12:33:15 PM IST

திருச்சி, ஜூலை 31: திருச்சி மாவட்டத்தில் நிகழாண்டில் 50,000 சிறு, குறு விவசாயிகளின் வயல்களில் மண் மாதிரிகள் எடுத்து ஆய்வு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் வேளாண் துறை கூடுதல் இயக்குநர் ந. பொன்னுசாமி.

திருச்சியில் சனிக்கிழமை நடைபெற்ற வேளாண் துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது:

திருச்சி மாவட்டத்தில் நிகழாண்டு சாகுபடிக்கு மண் மாதிரிகள் ஆய்வு முடிவின்படி உரப் பரிந்துரைகள் வழங்கப்படவுள்ளன. இதற்காக நிகழாண்டில் 50,000 சிறு, குறு விவசாயிகளின் வயல்களில் மண் மாதிரிகள் எடுத்து ஆய்வு செய்யப்படவுள்ளது.

எனவே, மண் ஆய்வின் அவசியம், மண் மாதிரிகள் எடுப்பது பற்றிய செயல் விளக்கங்கள் கிராமங்கள்தோறும் மேற்கொள்ள வேண்டும்.விவசாய ஆர்வலர் குழுக்கள், பண்ணை மகளிர் குழுக்கள், விளைபொருள் ஆர்வலர் குழுக்கள், உழவர் மன்ற அமைப்பாளர்கள், வட்டாரப் பண்ணை ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும்.இந்த மண் மாதிரிகள் போர்க்கால அடிப்படையில் துல்லியமாகச் சிறந்த முறையிலும், ஆய்வக நெறிமுறைகளைப் பின்பற்றியும் ஆய்வு செய்ய வேண்டும் என்றார் பொன்னுசாமி.

வேளாண் துறை இணை இயக்குநர் ஜே. சேகர், துணை இயக்குநர் எஸ். சபா நடேசன், இரா. சந்திரசேகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

தினமலர்

**பரண் மேல் ஆடு வளர்ப்பு முறை அறிமுகம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2011,01:54 IST

திருவள்ளூர் : பரண் மேல் ஆடு வளர்க்கும் முறையை, திரூரில் உள்ள வேளாண் அறிவியல் நிலையம் அறிமுகப்படுத்தியுள்ளது.இதுகுறித்து, திரூர் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் தேவநாதன் மற்றும் உதவிப் பேராசிரியர் நிர்மலாதேவி ஆகியோர் "தினமலர்' நிருபரிடம் கூறியதாவது:வேளாண்மையும், கால்நடை வளர்ப்பும் ஒன்றுடன் ஒன்று இணைந்த தொழில்களாகும். ஆடு, மாடு போன்ற கால்நடைகளை விவசாயிகள் தங்கள்

நிலங்களில் மேய்ச்சலுக்காக அனுப்பி வளர்த்து வருகின்றனர்.ஆனால், தற்போது விளைநிலங்கள் எல்லாம் குடியிருப்புப் பகுதிகளாக மாறி வருகின்றன. இதனால், கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்கள் நாளுக்கு நாள் சுருங்கி வருகின்றன. இதனால், விவசாயிகள் தங்கள் கால்நடைகளை மேய்க்க, மேய்ச்சல் நிலங்கள் இல்லாமல் தவிக்கும் சூழ்நிலையில் உள்ளனர். இந்நிலையில், மேய்ச்சல் நிலங்கள் இல்லாத நிலையிலும், ஆடுகளை பரண்கள் அமைத்து வளர்க்கும் புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.இம்முறையில், தரையில் இருந்து 3 அடி உயரத்தில் சல்லடைத் தரையை, மரப்பலகையிலோ அல்லது கம்பிகளிலோ கட்ட வேண்டும். இரு பலகைகளுக்கிடையே உள்ள இடைவெளி 2 செ.மீ., இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு அமைப்பதால், ஆடுகளின் சாணம் மற்றும் சிறுநீர் 3 அடி பள்ளத்தில் விழுந்து விடும். இதன் மூலம், ஆடுகள் நோய் பாதிப்பின்றி சுகாதாரமாக இருக்கவும் வழிவகுக்கும்.இப்பரண்கள் தரை மட்டத்திலிருந்து 12 அடி உயரம் வரை இருக்க வேண்டும். ஒரு கூண்டில் 10 பெண் ஆடுகளுக்கு1 ஆண் ஆடு என்ற விகிதத்தில் அடைக்க வேண்டும். சாதாரணமாக இப்பரண்களை வடக்கு அல்லது தெற்குப் பக்கம் நோக்கி அமைக்க வேண்டும். அப்போதுதான், சூரிய வெளிச்சம் மற்றும் நல்ல காற்றோட்டம் ஆகியவை கிடைக்கும்.இவ்வாறு அவர்கள் கூறினர்.நன்மைகள்: மேலும், இம்முறையின் மூலம், மேய்ச்சல் நிலம் இல்லாதவர்களும் ஆடு வளர்க்க முடியும். மேய்ச்சலினால் வீணாகும் சக்தியை, ஆடுகள் சேமித்து வைப்பதால், அதிக உடல் எடையை குறைந்த தீவனத்தின் மூலம் அடைகின்றன.பராமரிக்கவும், தீவனம் அளிக்கவும், நோய்த் தடுப்பு முறைகளை மேற்கொள்ளவும் எளிதாகிறது. அத்துடன், ஆட்டுத் திருட்டும் தடுக்கப்படுகிறது. குறைந்த இடத்தில் அதிக எண்ணிக்கையில் ஆடுகளை வளர்க்க முடியும். மேலும், எரு சேமிக்கப்பட்டு நிலத்திற்கு உரமாகக் கிடைக்கிறது எனவும் தெரிவித்தனர்.பி.முரளிதரன்

**நுண்ணூட்டச் சத்தால் மஞ்சள் பயிர் பாதிப்பு சாகுபடி பரப்பளவும் வெகுவாக சரிவு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2011,01:26 IST

கோபிசெட்டிபாளையம் : மஞ்சள் விலை குறைந்துள்ளதால், கோபி பகுதியில் மஞ்சள் பரப்பளவு குறைந்துள்ளது. நுண்ணூட்டச் சத்து குறைவால், மஞ்சள் பயிர் பாதிக்கப்பட்டுள்ளது. அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதி முதல் போகம் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. 24 ஆயிரம் ஏக்கரில் வழக்கமாக நெற்பயிர்தான் அதிகளவில் சாகுபடி செய்யப்படும். இதையடுத்து கரும்பும், மஞ்சள் சாகுபடியாகும். சென்றாண்டு துவக்கத்தில் மஞ்சள் விலை குவிண்டால் 16 ஆயிரம் ரூபாயை தாண்டியது. இதனால், கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி பாசன பகுதியில் விவசாயிகள், ஆர்வத்துடன் மஞ்சள் பயிரிட்டனர். கோபி சுற்று வட்டாரப் பகுதிகளில் வாய்க்கால் பாசனம் இல்லாத கிணற்று பாசன பகுதிகளில் இரண்டாம்

நெம்பர், நாட்டு மஞ்சள் மற்றும் ஒரிஸா மஞ்சள் ரகங்கள் பயிரிடப்பட்டது.
கால்வாய் பாசனப்பகுதிகளில் பெரும்பாலும் டி.டி.எஸ்.,8., டி.டி.எஸ்., 10, ஈரோடு விரலி, பி.எல்.ஆர்.,2 ஆகிய ரக மஞ்சள் பயிரிடப்பட்டது. நடப்பாண்டு துவக்கத்தில் இருந்து மஞ்சள் விலை திடீரென சரிவு ஏற்பட்டது. இதன் எதிரொலியாக, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் மஞ்சள் பரப்பரளவு 200 ஹெக்டர் வரை நடப்பாண்டு குறைந்து விட்டது. மஞ்சள் பயிரில் நுண்ணூட்டச் சத்து குறைவு ஏற்பட்டுள்ளதால், மஞ்சள் பயிரின் இலைகள் வெளிறியுள்ளன. மஞ்சள் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.
தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் பொங்கியண்ணன் கூறியதாவது: கோபி கோட்டத்தில் சென்ற ஆண்டு 1,300 ஹெக்டேரில் மஞ்சள் பயிரிடப்பட்டது. நடப்பாண்டு 1,100 ஹெக்டேரில் மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளது. ஜூன் 15ம் தேதி முதல் ஆகஸ்ட் 15ம் தேதி வரை மஞ்சள் பயிரிடும் பருவம். எல்.பி.பி., வாய்க்காலில் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கும் போது, எல்.பி.பி., வாய்க்கால் பாசனப் பகுதியில் மஞ்சள் பயிரிடப்படும். தற்போது, மஞ்சள் பயிரில் நுண்ணூட்டச் சத்துக் குறைவு காணப்படுகிறது. இக்குறையைப் போக்க, இரண்டு கிலோ சூப்பர் பாஸ்பரஸ் உரத்தை, நீரில் ஊற வைக்க வேண்டும். அடுத்த நாள் காலை வடிநீரில் 150 கிராம் ஃபெரஸ் சல்பேட், 150 கிராம் காப்பர் சல்பேட்,1 50 கிராம் மெக்னீஸியம் சல்பேட் ஆகியவற்றை கலந்து தெளிக்க வேண்டும். ஈரம் காயும் முன் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இவ்வாறு செய்தால் நுண்ணூட்டச் சத்து குறைபாட்டை போக்கலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**மஞ்சள் விலை இரண்டே நாளில் ரூ. 700 சரிவு : வட மாநிலங்களில் தேவை குறைவு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2011,01:26 IST

ஈரோடு: வட மாநிலங்களில் மஞ்சள் தேவை குறைந்துள்ள நிலையில், விற்பனை குறைந்துள்ளது. இரண்டே நாளில் 700 ரூபாய் வரை மஞ்சள் விலை சரிந்துள்ளது. ஈரோடு மஞ்சள் சந்தைகளில், சனி, ஞாயிற்றுக் கிழமை விடுமுறைக்கு பின், நேற்று வழக்கம் போல் ஏலம் துவங்கியது. 29ம் தேதி மஞ்சள் குவிண்டாலுக்கு 300 ரூபாய் வரை குறைந்தது. ஈரோடு சுற்றுவட்டாரப் பகுதியிலும், தர்மபுரி, சேலம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும் விவசாயிகள் வருகை குறைந்து காணப்பட்டது. மஞ்சள் மண்டிகளில் இருப்பு வைத்தவர்கள், நல்ல விலையை எதிர்பார்த்து காத்துக்கிடந்தனர். ஆனால், வட மாநிலங்களில் விசேஷ காலங்கள் குறைவு என்பதால், மஞ்சள் தேவை குறைந்துள்ளது.
இதனால், வெளிமாநில வியாபாரிகள், மஞ்சள் ஏஜன்ட்கள் வருகை குறைவாகவே இருந்தது. விலை மேலும் 300 ரூபாய் குறைந்தது. ஜூலை மாதம் 8ம் தேதி திடீரென விரலி ஒரு குவிண்டாலுக்கு அதிகபட்சமாக 10,190 ரூபாயை தொட்டது. ஆனால், ஓரிரு நாளில் மஞ்சள்

விலை 700 ரூபாய் வீழ்ச்சி அடைந்ததால், விவசாயிகள் வழக்கம் போலவே, மண்டிகளில் இருப்பு வைத்து சென்றனர். சிலர் மேலும் விலைகுறைய வாய்ப்புள்ளதாக கருதி, மஞ்சளை விற்பனை செய்தனர்.

நேற்றைய மார்க்கெட் நிலவரப்படி, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், வெள்ளிக் கிழமை விரலி ஒரு குவிண்டால் 300 ரூபாய் குறைந்து 6,472க்கு விற்றது, நேற்று மேலும், குவிண்டாலுக்கு 292 ரூபாய் குறைந்து, 6,180ல் இருந்து 6,806 ரூபாய் வரை ஏலம் போனது. கிழங்கு 200 ரூபாய் குறைந்து குறைந்தபட்சம் 5,490ல் இருந்து 6,099 ரூபாய் வரை ஏலம் போனது.வெளி மார்க்கெட்டில் விரலி ஒரு குவிண்டால் 5,009ல் இருந்து 6,806 ரூபாய் வரையும், கிழங்கு 4,839ல் இருந்து 6,076 ரூபாய் வரையும் ஏலம் போனது. ஈரோடு சொசைட்டியில் விரலி 5.589ல் இருந்து 6,810 ரூபாய் வரையும், கிழங்கு 5,575ல் இருந்து 6,160 ரூபாய் வரையும் ஏலம் போனது.இரண்டே நாளில் திடீரென 700 ரூபாய் வரை விலை குறைந்ததை அடுத்து, விவசாயிகள் மத்தியில் பெரும் கலக்கம் ஏற்பட்டுள்ளது.

**மா,நெல்லி, முந்திரி அமோக விளைச்சல் நெல்லை மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2011,01:37 IST

திருநெல்வேலி : நெல்லை மாவட்டத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கத்திட்டத்தின் கீழ் மா, நெல்லி, முந்திரி சாகுபடி நல்ல முறையில் விளைச்சல்கள் உள்ளதால் விவசாயிகளுக்கு நல்ல பலன்கள் கிடைத்துள்ளன.தேசிய தோட்டக்கலை இயக்க திட்டம் கடந்த 2005ம் ஆண்டு முதல் நெல்லை மாவட்டத்தில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக பழ மரங்களான நெல்லி, மா சாகுபடிகள் நல்ல விளைச்சல் கொடுத்து வருகிறது. தேசிய தோட்டக்கலை இயக்கத்திட்டம் நெல்லை மாவட்டத்தில் செயல்படுத்த துவங்கியதில் இருந்து அனைத்து வட்டாரங்களிலுள்ள கணிசமான சாகுபடிக்கு உகந்த தரிசு நிலங்கள் எல்லாம் பழ மரங்களான மா, நெல்லி மரங்களாக சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அவ்வாறு பழமரங்களை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் அதன் பலன்களை எடுக்க துவங்கியுள்ளனர். மேலநீலிதநல்லூர் வட்டாரம் வெள்ளாளன் குளம் கிராமத்தில் தோண்டப்பட்ட பண்ணைக்குளத்தில் மழைக்காலங்களில் பெறப்பட்ட தண்ணீரை கொண்டு பாசனம் செய்யப்பட்டு வரும் மா, நெல்லி, முந்திரி மரங்கள் தற்சமயம் பலன் கொடுக்க துவங்கியுள்ளன.வெள்ளாளன்குளம் கிராமத்தில் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் மூலம் தோண்டப்பட்ட பண்ணை குளத்தின் மூலம் சுமார் 25 ஏக்கர் பரப்பில் சுற்றுப்புற தோட்டங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மா,நெல்லி, முந்திரி மரங்கள் எல்லாம் நன்முறையில் பராமரிக்கப்பட்டு தற்சமயம் காய்க்கத் துவங்கியுள்ளது.இதனால் இப்பகுதியில் உள்ள சுமார் 25 முதல் 30 விவசாயிகள் பலன்பெற்று வருகின்றனர். மேலும் மானாவாரியாக இருந்த தரிசு நிலங்கள்

குறிப்பிடும் அளவுக்கு விலைநிலங்களாக மாற்றப்பட்டு வருகிறது.
இவ்வாறு மேலநீலித நல்லூர் தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜாமுகமது தெரிவித்தார்.

**வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு விடும் திட்டம் அறிமுகம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 02,2011,01:51 IST

கோவில்பட்டி : கோவில்பட்டி வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் கணேசன் தனது செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, வேளாண்மை பொறியியல் துறை மூலமாக வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு விடப்படும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கோவில்பட்டி வேளாண்மை பொறியியல்துறை உபகோட்டத்தில் அரசு நிர்ணயித்த நியாயமான வாடகையாக டிராக்டர், மணிக்கு ரூபாய் 300க்கும், மண் தள்ளும் இயந்திரம் (செயின் புல்டோசர்) மணிக்கு வாடகையாக ரூபாய் 755க்கும் மற்றும் பாறை உடைக்கும் கருவிகள் நாள் ஒன்றுக்கு ரூபாய் 250க்கும் வாடகைக்கு விடப்படுகின்றன. விவசாய பணிகளை உத்வேகத்தோடு செய்ய விவசாய பெருமக்கள் இந்த திட்டத்தை பயன்படுத்தி பயன்பெறலாம். இந்த திட்டம் சம்பந்தமான விரிவான விபரங்களை உதவி செயற்பொறியாளர், பிளாட் எண்.127, 128 மகாலட்சுமி நகர், இளையரசனேந்தல் ரோடு, கோவில்பட்டி என்ற முகவரியில் தெரிந்து கொள்ளலாம் என கோவில்பட்டி உதவி செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

**நிலக்கடலை வரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2011,22:08 IST

அவிநாசி : சேவூரில் நேற்று நடந்த ஏலத்துக்கு நிலக்கடலை வரத்து சற்று அதிகரித்திருந்தது. சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு 350 மூட்டை வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை விட, 50 மூட்டை அதிகம். ஆடிப்பெருக்கு பண்டிகை நெருங்கியுள்ளால் வரத்து அதிகரிக்க துவங்கியுள்ளது. வரத்து அதிகரித்திருந்தாலும் கூட, கடந்த வாரத்தை விட, அனைத்து ரகங்களும் குவிண்டாலுக்கு ரூ.250 வரை குறைவாக ஏலம் போனது. நேற்று நிலக்கடலை (காய்ந்தது) முதல் ரகம் குவிண்டாலுக்கு ரூ.3,420 முதல் 3.630 வரை, இரண்டாம் ரகம் ரூ.3,100 முதல் 3,360 வரை, மூன்றாம் ரகம் ரூ.2,550 முதல் 2,850 வரை விலை போனது.
சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) மகேந்திரசிங் கூறுகையில், ""ஆடிப்பெருக்கு நெருங்கியுள்ளதால், அறுவடை ஆரம்பித்துள்ளது. இனி வரும் வாரங்களில்

வரத்து அதிகரிக்கும். நேற்றைய ஏலத்தில், 59 விவசாயிகள், ஒன்பது வியாபாரிகள் பங்கேற்றனர். ரூ.4.72 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது," என்றார்.

**நாட்டுக்கோழி வளர்ப்புக்கு வங்கி கடனுதவி :விவசாயிகள், இல்லத்தரசிகள் எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2011,22:08 IST

பல்லடம் : பல்லடம் பகுதியில் நாட்டுக்கோழி வளர்ப்புத்தொழில் பரவலாகி வருகிறது. இத்தொழிலை மேம்படுத்த வங்கிகள் குறைந்த வட்டியில் கடன் வழங்க முன்வர வேண்டும் என நாட்டுக்கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், இல்லத்தரசிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.பல்லடம் பகுதி, "பிராய்லர்' எனப்
படும் கறிக்கோழி வளர்ப்பில் தமிழகத்தில் முதலிடத்தில் உள்ளது. இப்பகுதியில் தினமும் ஐந்து லட்சம் கறிக்கோழிகள் வரை உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகம், கேரளா பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப் படுகின்றன.

கோவை, திருப்பூர் மற்றும் கேரளாவில் உள்ள கோழிக்கோடு, ஒத்தப்பாலம், திருச்சூர், திருவனந்தபுரம் ஆகிய பகுதிகளில் நாட்டுக்கோழிகளுக்கு "கிராக்கி' ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, பல்லடம் பகுதியில் பலர், குடிசைத்தொழில்போல் ஆங்காங்கே நாட்டுக்கோழி வளர்ப்பில் ஈடுபடத்துவங்கியுள்ளனர். குறிப்பாக, சிறு விவசாயிகள், வீட்டில் இருக்கும் இல்லத்தரசிகள், தங்களின் அன்றாட பணிகளுக்கு இடையே, 50, 100, 200 என்ற எண்ணிக்கையில், இட வசதிக்கு ஏற்ப நாட்டுக்கோழி வளர்ப்பில் ஈடுபடுகின்றனர்.

கறிக்கோழி 46 நாட்கள் முதல் 49 நாட்களில் இரண்டு கிலோ எடை அளவுக்கு வளர்கிறது. நாட்டுக்கோழி 125 நாட்களில் ஒரு கிலோ 250 கிராம் எடை மட்டுமே வளரும் தன்மை கொண்டது. கறிக்கோழி உயிருடன் ஒரு கிலோ தற்போது ரூ.56க்கு விற்கப்படுகிறது. நாட்டுக்கோழி உற்பத்தியாளர்களிடம் கிலோ ரூ.120 முதல் 130க்கு கொள்முதல் செய்யப்பட்டு, கடைகளில் உயிருடன் கிலோ ரூ.150க்கு விற்கப்படுகிறது. கறிக்கோழிகளை விட, நாட்டுக்கோழி ருசி, புரோட்டின் சத்து அதிகமாக உள்ளது.நாட்டுக்கோழிகளை விரும்பி நுகர்பவர்கள், மீண்டும், மீண்டும் அவற்றையே வாங்கி நுகர விரும்புகின்றனர்.

பல்லடம் பகுதியில் தற்போது, பல வீடுகளில் நாட்டுக் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. நாட்டுகோழி குஞ்சு ஒன்று ரூ.20 முதல் 25 வரை சில நிறுவனங்களால் விற்பனை செய்யப்படுகின்றன. விவசாயிகள், இல்லத்தரசிகள் சிலர் கூறுகையில், "100 நாட்டுக்கோழிகளை

வளர்க்க துவங்கினால், வீட்டை விட்டு வெளியே வேலைக்கு செல்லாமல், ஒரு மாதம் குறைந்தபட்சம் ரூ.5,000 முதல் 6,000 வரை சம்பாதிக்கலாம். நாட்டுக்கோழி வளர்ப்பு தொழிலை மேம்படுத்த அரசு குறைந்த வட்டியில் வங்கிகள் மூலம் கடன் தர முன்வர வேண்டும்,' என்றனர்.

**தோட்டக்கலை பயிர் மானியம் அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2011,23:13 IST

வடமதுரை : தேசிய தோட்டக்கலை இயக்ககத் திட்டத்தின் கீழ் மா, நெல்லி, பப்பாளி பயிரிட 75 சதவிகிதத்தில் கன்றுகள், இடுப்பொருட்கள் வழங்கப்படுகிறது.

வடமதுரை தோட்டக்கலை உதவி இயக்குனர் செல்வராஜ் கூறியதாவது: ஒரு ஹெக்டேரில் "மா' பயிரிட 75 சதவிகித மானியமாக 9900 ரூபாய், நெல்லிக்கு 10503 ரூபாய், பப்பாளிக்கு 24652 ரூபாய், எலுமிச்சைக்கு 15003 ரூபாய் கன்றுகள், இடுபொருட்கள் வழங்கப்படும். திசுவாழை பயிரிட 50 சதவிகித மானியமாக ஹெக்டேருக்கு 31202 ரூபாய்க்கு திசுவாழை கன்றுகளும், வாழைக்கு 50 சதவிகித மானியமாக 16875 ரூபாய்க்கு இடுபொருட்களும் வினியோகிக்கப்படும். மிளகாய், வெங்காய பயிர்களுக்கு 50 சதவிகித மானியத்தில் தலா 12500 ரூபாய்க்கு இடுபொருட்கள் வழங்கப்படும். ஆர்வமுள்ள விவசாயிகள் சிட்டா, அடங்கல், ரே ஷன் கார்டு நகல், இரண்டு பாஸ்போர்ட் போட்டோவுன் தோட்டக்கலை அலுவலகத்தை அணுகலாம், என்றார்.

**பன்னீர் திராட்சை சாகுபடி பரப்பளவு அதிகரிக்க வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2011,22:26 IST

பேரூர் : தொண்டாமுத்தூரில் நடப்பாண்டு திராட்சை சாகுபடி மகசூல், பாதிக்கு மேலாக குறைந்து போயுள்ளது. சாகுபடி பரப்பை அதிகரிக்க அரசு முன்வரவேண்டுமென, திராட்சை விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர். தமிழகத்தில் கம்பத்துக்கு அடுத்தபடியாக, தொண்டாமுத்தூர் வட்டாரத்தில் பன்னீர் திராட்சைகள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன. இதில், ஆறுமுகக்கவுண்டனூர், தீத்திபாளையம், மாதம்பட்டி, செல்லப்ப கவுண்டன்புதூர், கரடிமடை, பூலுவபட்டி, தீனம்பாளையம், தாளியூர் உள்பட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பன்னீர் திராட்சை பயிர் செய்யப்படுகிறது.

கடந்த மூன்றரை மாதத்துக்கு முன், பழங்கள் பிடிப்பதற்காக, திராட்சை கொடிகளில் கவாத்து செய்யப்பட்டது. ஒரு மாதம் கழித்து பெய்த மழையால், திராட்சை கொடிகளில் நோய் தாக்கப்பட்டது. கவாத்து செய்யப்பட்ட திராட்சை கொடிகளில் பிடித்த பழங்கள் 60 முதல் 70 சதவீதம் பாதிக்கப்பட்டது. இதனால், திராட்சை மகசூல் பாதிக்கு மேலாக குறைந்து போயுள்ளது. இதன் காரணமாக, தொண்டாமுத்தூரில் இருந்து, கோவை மார்க்கெட்டுக்கு தினசரி கொண்டு செல்லப்படும் பழங்களின் எண்ணிக்கை 50 டன்னிலிருந்து குறைந்து, தற்போது 15 டன் பழங்கள் மட்டுமே அனுப்பி வைக்கப்படுகின்றன.

குளிர்பதன கிடங்கு அமையுமா?: கடந்த 10 ஆண்டுகளுக்கு முன், இப்பகுதியில் இரண்டாயிரம் ஏக்கருக்கு மேல் பயிர் செய்யப்பட்டு வந்த இத்தொழில், தற்போது பாதியாக குறைந்து போய்விட்டது. திராட்சை விவசாயம் லாபகரமானது என்றாலும், ஒரு ஏக்கருக்கு கல்கால், கம்பி, பந்தல், கொடிமர நடவு, ஆள்கூலி என 3 லட்சம் ரூபாய் வரை செலவாகிறது. கவனத்துடன் பயிர்பாதுகாப்பு செய்தால் மட்டுமே, ஒரு ஏக்கருக்கு ஏழு முதல் 9 டன் வரை மகசூல் எடுக்கலாம். மானியத்துடன் வங்கிக் கடனுதவி வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கைவிடுத்துள்ளனர். திராட்சை தொழில்நுட்ப ஆலோசகர் மாணிக்கம் கூறுகையில்,""நிதியுதவி இல்லாத காரணத்தால் பரப்பளவு குறைந்து வருகிறது.

குளிர்காலங்களில் அழுகி வீணாகும் பல டன் திராட்சை பழங்களை பாதுகாத்திடவும், திராட்சை குளிர்பதன கிடங்கு மற்றும் ஒயின் தொழிற்சாலையை இப்பகுதியில் அமைத்திடவும் அரசு முன்வர வேண்டும். இது, திராட்சை தொழிலுக்கும், தொழிலைச் சார்ந்துள்ள விவசாயிகளுக்கும் பெரும் ஊக்கமாக அமையும்,"என்றார். விலை உயர்வு: கடந்த இரண்டரை மாதம் முன் பெய்த மழையால், ஒரு கிலோ திராட்சை 15 முதல் 20 ரூபாய்க்கும், ஆறு கிலோ கொண்ட திராட்சை பழப்பெட்டி, 120 முதல் 140 ரூபாய் வரை மட்டுமே விற்பனையானது.

தற்போது, பருவமழை சீசனாக இருந்தாலும், பழங்களுக்கு அதிகமான விலை கிடைத்துள்ளது. ஒரு கிலோ திராட்சை 35 முதல் 40 ரூபாய் வரைக்கும், ஆறுகிலோ கொண்ட திராட்சை பழப்பெட்டி 260 முதல் 280 ரூபாய் வரைக்கும் விற்பனையாகிறது. தென்மேற்கு பருவமழை சீசனில் முன் எப்போதும், இந்தளவுக்கு பழத்துக்கு விலை கிடைக்கவில்லையென திராட்சை விவசாயிகள் தெரிவித்தனர்.

தினத் தந்தி

## கிலோவுக்கு ரூ.2 அதிகரிப்பு பசுந்தேயிலைக்கு கூடுதல் விலை ஜெயலலிதா அறிவிப்பு

*சென்னை, ஆக.2–*

*சிறு தேயிலை விவசாயிகளுக்கு, தேயிலைக்கான நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் பசுந்தேயிலை கிலோவுக்கு ரூ.2 அதிகரித்து கொடுக்கப்படும் என்று முதல்–அமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.*

*இதுகுறித்து முதல்–அமைச்சர் ஜெயலலிதா நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:–*

*சிறு தேயிலை விவசாயிகள் நலனுக்காக...*

*நீலகிரி மாவட்ட மக்களுக்கு வாழ்வாதாரம் அளிக்கும் இன்றியமையாத தொழிலாக தேயிலைத் தொழில் விளங்கி வருகிறது. இந்த மாவட்டத்தில் உள்ள 60 ஆயிரம் சிறு தேயிலை விவசாயிகள் தங்கள் வாழ்க்கைக்கு இந்தத் தொழிலையே நம்பி உள்ளனர். தேயிலை விவசாயிகளுக்கு கூடுதலான விற்பனை வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரும் வகையில், என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில், 'ஊட்டி டீ' என்ற பெயரில் தேயிலைத்தூள் விற்பனை செய்யும் திட்டத்தை நான் வகுத்துக் கொடுத்தேன். அதன்படி, 'இண்ட்கோசெர்வ்' என்ற நிறுவனத்தின் மூலமாக ஏல விற்பனை மையங்களில் இருந்து தயாரிக்கப்பட்ட தேயிலையை வாங்கி, பதப்படுத்தி அவற்றை சிப்பங்களில் அடைத்து, 'ஊட்டி டீ' என்ற வணிகப் பெயரில், கூட்டுறவுத் துறை ரேஷன் கடைகள் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.*

*மின் ஏல மையம்*

*இதேபோல, சிறு தேயிலை விவசாயிகளின் தேயிலைக்கு நல்ல விலை கிடைப்பதற்காக, 'டீ செர்வ்' என்று அழைக்கப்படும் கணினிமயமாக்கப்பட்ட மின் ஏல மையம் ஒன்றை 2003–ம் ஆண்டு செப்டம்பர் 13–ந் தேதி தொடங்கி வைத்தேன். உலகிலேயே தேயிலை விற்பனைக்கென ஏற்படுத்தப்பட்ட முதலாவது மின் ஏல மையம் என்ற பெருமையை இந்த மையம் பெற்றது.*

*2005–ம் ஆண்டு, தேயிலை விலையில் ஏற்பட்ட கடும் வீழ்ச்சியில் இருந்து சிறு தேயிலை*

விவசாயிகளை காப்பாற்றுவதற்காக, “சிறு தேயிலை விவசாயிகள் பாதுகாப்புத் திட்டம்'' என்ற ஒரு திட்டத்தையும் செயல்படுத்தினேன்.

பசுந்தேயிலை கிலோவுக்கு ரூ.2 அதிகரிப்பு

நீலகிரி மாவட்டத்தில் 15 தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இதில், சுமார் 22 ஆயிரம் சிறு தேயிலை விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் பசுந்தேயிலைக்கான கட்டுப்படியாகும் விலை கிலோ ஒன்றுக்கு சராசரியாக 6 ரூபாய் என வழங்கும் நிலை கடந்த மே மாதம் முதல் ஏற்பட்டுள்ளது.

தனியார் தொழிற்சாலைகள் பசுந்தேயிலைக்கு, கிலோ ஒன்றுக்கு 8 ரூபாய் வீதம் வழங்கி வரும் நிலையில், தேயிலைத் தொழிற்சாலை உறுப்பினர்களிடம் இருந்து பெறப்படும் பசுந்தேயிலைக்கு அதற்கு இணையான விலை வழங்கப்பட வேண்டும் என உத்தரவிட்டேன். இதன் அடிப்படையில், தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக உள்ள 22 ஆயிரம் சிறு தேயிலை விவசாயிகளுக்கு பசுந்தேயிலைக்கு கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய் கூடுதலாக மே மாதத்தில் வழங்கப்பட்டது.

கூடுதல் செலவு ரூ.11 கோடி

இந்த 22 ஆயிரம் சிறு தேயிலை விவசாயிகளுக்கு, தேயிலைக்கான நியாயமான விலை தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில், இந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை பசுந்தேயிலைக்கு கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய் கூடுதலாக வழங்க உத்தரவிட்டுள்ளேன். இதன்காரணமாக, அரசுக்கு சுமார் ரூ.11 கோடியே 20 லட்சம் கூடுதல் செலவு ஏற்படும்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## நடப்பு நிதி ஆண்டின் முதல் 4 மாதங்களில் காபி ஏற்றுமதி 38 சதவீதம் அதிகரிப்பு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு நிதி ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் (ஏப்ரல் – ஜூலை) நாட்டின் காபி ஏற்றுமதி, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 38 சதவீதம் அதிகரித்து 1.05 லட்சம் டன்னிலிருந்து 1.46 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

காபி விலை

காபி ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள அமோக வளர்ச்சி குறித்து காபி வாரியத்தின் உயர் அதிகாரி ஒருவர் கூறும்போது, "நடப்பு நிதி ஆண்டில் இதுவரை காபி ஏற்றுமதி அளவு மற்றும் மதிப்பின் அடிப்படையில் சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது. காபி ஏற்றுமதியில் முன்னிலை வகிக்கும் பல நாடுகளில் உற்பத்தி குறைந்துள்ளது. இதனையடுத்து, சர்வதேச சந்தைகளில் காபி விலை மிகவும் உயர்ந்துள்ளது. இதனை வாய்ப்பாக பயன்படுத்தி, நிறுவனங்கள் காபியை அதிக அளவில் ஏற்றுமதி செய்துள்ளன" என்று தெரிவித்தார்.

கடந்த நிதி ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் நம் நாட்டின் காபிக்கு சர்வதேச சந்தைகளில் சராசரியாக கிலோ ஒன்றுக்கு ரூ.97.90 கிடைத்தது. இது, 39 சதவீதம் அதிகரித்து நடப்பு நிதி ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூ.135.89–ஆக உயர்ந்துள்ளது. இதனை வெளிப்படுத்துகின்ற வகையில், அளவின் அடிப்படையில் ஏற்றுமதி 38 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், மதிப்பின் அடிப்படையில் இது 92 சதவீதம் அதிகரித்து ரூ.1,031 கோடியிலிருந்து ரூ.1,977 கோடியாக உயர்ந்துள்ளது.

உற்பத்தி

வெளிநாடுகளில் உயர்ந்து வரும் தேவைப்பாட்டை ஈடுகட்டும் வகையில் நம் நாட்டிலும் காபி உற்பத்தி அதிகரித்து வருகிறது. கடந்த நிதி ஆண்டில் காபி உற்பத்தி 3.02 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது, நடப்பு நிதி ஆண்டில் 7 சதவீதம் அதிகரித்து 3,22,250 டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நடப்பு 2010–11–ஆம் காபி பருவத்தின் (அக்டோபர் – செப்டம்பர்) முதல் 10 மாதங்களில் காபி ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 41 சதவீதம் அதிகரித்து 2,20,358 டன்னிலிருந்து 3,11,798 டன்னாக உயர்ந்துள்ளது.

நம் நாட்டிலிருந்து இத்தாலி, ஜெர்மனி, பெல்ஜியம், ரஷ்யா மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கு காபி அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஏற்றுமதி அதிகரிப்பதால், நாட்டின் அன்னியச் செலாவணி வருவாய் உயர்ந்து, பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும்.

# கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் நீண்ட இழுபறிக்கு பிறகு மாத விலை நிர்ணயம்

*மஞ்சூர், ஆக.2–*

*நீண்ட இழுபறிக்கு பிறகு கூட்டுறவு தொழிற் சாலை களில் மாத விலை நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது.*

*கூட்டுறவு தொழிற்சாலைகள்*

*நீலகிரி மாவட்டத்தில் 14 கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளும், 100க்கும் மேற் பட்ட தனியார் தேயிலை தொழிற்சாலைகளும் உள் ளன. கூட்டுறவு தொழிற் சாலைகளுக்கு விவசாயிகள் வினியோகம் செய்யும் பச்சை தேயிலைக்கு மாதாந்திர விலை நிர்ணயமும், பல தனி யார் தொழிற்சாலை களில் வார விலையும் நிர்ணயம் செய்யப்படுகிறது.*

*கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளில் நேஷனல் ரேட் அடிப்படையில் குன்னூர் இன்கோசர்வ் மாதாந்திர விலை நிர்ணயம் செய்து வரு கிறது.*

*விலை நிர்ணயம்*

*இந்த நிலையில் கடந்த ஜூன் மாதம் விவசாயிகள் கூட்டுறவு தொழிற்சாலை களுக்கு வினியோகம் செய்த பச்சை தேயிலைக்கு ஜூலை மாதம் முதல் வாரத்தில் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். ஆனால் ஜூலை முழுவதும் விலை நிர்ணயம் செய்யப்பட வில்லை. இதனால் விவசாயிகள் மிகவும் அதிருப்தியில் இருந்தனர்.*

*நீண்ட இழுபறிக்கு பிறகு நேற்று ஜூன் மாதம் வினியோ கம் செய்த பச்சை தேயிலைக்கு கூட்டுறவு தொழிற்சாலைகளில் விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.*

*ரூ.8.60 பைசா நிர்ணயம்*

*கூடலூர் சாலிஸ்பரி தொழிற்சாலையில் ஒரு கிலோ வுக்கு ரூ.9 எனவும், மஞ்சூர், கைக்காட்டி, குந்தா (எடக் காடு), பிக்கட்டி, பிதிர்காடு, பிராண்டியர், பந்தலூர் ஆகிய தொழிற் சாலைகளில் ரூ.8.60 பைசா என்றும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள் ளது. மேற்குநாடு, கிண்ணக் கொரை, மகாலிங்கா ஆகிய கூட்டுறவு தொழிற் சாலை களில் ரூ.8.10 பைசா எனவும், கரும்பாலம் கூட்டுறவு தொழிற்சாலையில் ரூ.8 எனவும், எப்பநாடு, இத்தலார் ஆகிய தொழிற்சாலைகளில் ரூ.7.60 பைசா எனவும் குன்னூர் இன்கோசர்வ் விலை நிர்ணயம் செய்துள்ளது.*

*தற்போதைய சூழ்நிலையில் மாதந்தோறும் சரியான நேரத்தில் விலை நிர்ணயம் செய்தால் மட்டுமே சமாளிக்க முடியும் என்று விவசாயிகள் கருத்து தெரிவித்தனர்.*

## கூடலூர் பகுதியில் அழிந்து வரும் சந்தன மரங்கள்



கூடலூர் கோக்கால் மலைக்கு செல்லும் வழியில் சந்தன மரம் ஒன்று வெட்டி கடத்தப்பட்டுள்ள காட்சி.

கூடலூர், ஆக.2–

கூடலூர் பகுதியில் சந்தன மரங்களின் எண்ணிக்கை மிக குறைந்து வருகிறது. சம்பந்தப்பட்ட துறை யினர் கடும் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே சந்தன மரங்களை காப்பாற்ற முடியும் என சுற்றுச்சூழல் ஆர் வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தங்கம் விளையும் பூமி

கூடலூர் வனப்பகுதிகளில் தங்கம் விளைந்து வருகிறது. இதனால் இலைமறை காய் போல சிலர் தங்க கற்களை வெட்டி எடுத்து வருகின்றனர். இதுமட்டுமின்றி அரிய வகை மூலிகைகள், மரங்கள் செழித்து வளருகின்றன. மேலும் விலை உயர்ந்த மரங்களான சந்தனம், ஈட்டி கூடலூர் பகுதியில் அதிகளவு இயற்கையாக வளர்ந்து வருகின்றன.

ஆனால் ஈட்டி மரங்கள் அதிகளவு வெட்டி கடத்தப் பட்டு விட்டன. இதனால் ஈட்டி மரங்களின் எண்ணிக் கையும் வெகுவாக குறைந்து விட்டது. இதற்கு அடுத்தபடி யாக சந்தன மரங்கள் விரல் விட்டும் எண்ணிக்கையில் உள்ளது. கூடலூரில் உள்ள கோக்கால் மலை, மார்த் தோமா நகர் ஆகிய பகுதிகளில் பெருமளவு வளர்ந்திருந்த சந்தன மரங்கள்ளை காலப் போக்கில் வனக்கொள்ளை யர்கள் வெட்டி கடத்தி

விட்டனர்.

அழிந்து வரும் சந்தன மரங்கள்

தற்போது குறிப்பிட்ட இடங்களில் சில சந்தன மரங்கள் மட்டுமே உள்ளன. அதற்கு ஆபத்து ஏற்பட்டுள் ளது. கோத்தர்வயல், கோக்கால் மலைகளில் நன்கு தரமாக வளர்ந்திருந்த சந்தன மரங்களை சில மாதங்களுக்கு முன்பு வனக்கொள்ளையர்கள் வெட்டி கடத்தினர். இது சம்பந்தமாக வனத்துறையினர் விசாரணை நடத்தியும் இதுவரை சந்தன மர கடத்தலில் யாரும் கைது செய்யப்பட வில்லை.

இதனால் நாளுக்குநாள் மர்ம ஆசாமிகள் சந்தன மரங்களை குறிவைத்து வேட்டையாடி வருகின்றனர். இந்த நிலையில் நேற்று மேல் கூடலூரில் இருந்து கோக்கால் மலைக்கு செல்லும் வழியில் உள்ள தனியார் எஸ்டேட் வேலியோரம் நின்றிருந்த பெரிய சந்தன மரத்தை இரவோடு இரவாக வனக்கொள்ளையர்கள் வெட்டி அடிப்பாகத்தோடு கடத்தி சென்றனர். மேலும் வெட்டப்பட்ட மரத்தின் அருகே நின்றிருந்த மற்றொரு சந்தன மரத்தையும் காலி செய்து விட்டு வனக்கொள் ளையர்கள் தலைமறைவாகி னர்.

இவ்வாறு நாளொரு மேனி யும் பொழுதொரு வண்ணமு மாக சந்தன மரங்களை வனக் கொள்ளையர்கள் சூறையாடி வருகின்றனர். சம்பந்தப்பட்ட துறையினரும் ரோந்து பணி யில் ஈடுபட்டு பாதுகாப்பு பணிகளை மேற்கொள்வ தில்லை என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட துறையினர் இனி வரும் காலங் களில் கூடலூர் பகுதியில் இயற்கையாக வளரும் சந்தன மரங்களை பேணி பாதுகாக்க முன்வர வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,860–2,930

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை
4,190–4,250

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட)
9,800–00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,575–00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின்(வரிஉள்பட) 2,013–00

**நல்லெண்ணெய்**

குமாரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா,புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 10,500–00
டின் (15கிலோ) 1,750–00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட)
11,100.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,850–00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,215.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்டஎண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,635.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,125.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி)
557–00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஆக.1–

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 11,500 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 3,200 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 3,800 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 1,960 | 110.00 |
| துபருப்பு | ரூ. 5,200 | 58.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,300 | 38.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) | ரூ. 6,400 | 73.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 6,900 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 4,000 | 46.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 4000 | 40.00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,200 | 42.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 7,200 | 72.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,600 | 66.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,100 | 31.00 |
| சர்க்கரை | ரூ. 2,700 | 27.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஆக.1–

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:–

1. வி.797 22எம்.எம் ரூ. 5,624
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 6,749
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 8,706
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 7,592
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 7,717
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 9,561
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 14,622

## கோவை உழவர் சந்தை

கோவை,ஆக.1–

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 30–00 | காலிப்பிளவர் | ரூ. | 16–20 |
| கத்தரிக்காய் | ரூ. | 14–16 | பொறியல் தட்டை | ரூ. | 14–20 |
| வெண்டைக்காய் | ரூ. | 18–20 | தேங்காய் | ரூ. | 8–13 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 5–6 | பட்டாணி | ரூ. | 60–95 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 5–6.50 | பூண்டு | ரூ. | 85–00 |
| புடலை | ரூ. | 16–18 | கறிவேப்பிலை | ரூ. | 12–14 |
| பீர்க்கான்காய் | ரூ. | 12–14 | அகத்தி | ரூ. | 16–00 |
| சுரைக்காய் | ரூ. | 14–12 | வாழைக்காய் | ரூ. | 16–20 |
| பாகற்காய் | ரூ. | 12–14 | குடைமிளகாய் | ரூ. | 28–32 |
| கொத்தவரை | ரூ. | 14–18 | சாதா பீன்ஸ் | ரூ. | 18–20 |
| பூசணிக்காய் | ரூ. | 8–00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 38–00 |
| அரசாணிக்காய் | ரூ. | 6–00 | கறிபீன்ஸ் | ரூ. | 20–22 |
| மேராக்காய் | ரூ. | 18–00 | புஸ்பீன்ஸ் | ரூ. | 24–36 |
| பச்சை மிளகாய் | ரூ. | 24–00 | காளான் | ரூ. | 80–150 |
| குண்டு மிளகாய் | ரூ. | 28–00 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11–00 |
| சின்னவெங்காயம் | ரூ. | 14–15 | மாங்காய் | ரூ. | 14–16 |
| பெரியவெங்காயம் | ரூ. | 15–00 | திராட்சை | ரூ. | 65–00 |
| இஞ்சி | ரூ. | 34–00 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 16–18 |
| முருங்கைக்காய் | ரூ. | 18–22 | கொய்யா1கிலோ | ரூ. | 28–32 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 20–22 | மாதுளை1கிலோ | ரூ. | 80–00 |
| சேனைகிழங்கு | ரூ. | 25–00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 13–15 |
| கருணைகிழங்கு | ரூ. | 30–00 | வரமிளகாய் | ரூ. | 90–00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22–00 | மாம்பழம் | ரூ. | 25–43 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 14–15 | ஆப்பிள் | ரூ. | 110–126 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 16–00 | சாத்துக்குடி | ரூ. | 36–00 |
| சிறுகிழங்கு | ரூ. | 18–22 | நெல்லிக்காய் | ரூ. | 32–00 |
| முள்ளங்கி | ரூ. | 10–15 | ஆரஞ்சு | ரூ. | 70–00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 24–26 | வெள்ளரி | ரூ. | 12–26 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 14–18 | புளி 1 கிலோ | ரூ. | 80–00 |
| நூல்கோல் | ரூ. | 18–20 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 38–00 |
| கொத்துமல்லி | ரூ. | 24–00 | அவரை | ரூ. | 20–26 |
| டர்னிப்ஸ் | ரூ. | 18–20 | நிலக்கடலை | ரூ. | 35–00 |
| முட்டைகோஸ் | ரூ. | 10–12 | மக்காச்சோளம் | ரூ. | 12–20 |
| கலர்கோஸ் | ரூ. | 15–00 | | | |
| புதினா | ரூ. | 16–00 | | | |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:–

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 26700 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 27,200 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 28,200 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 11,500 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 12,300 |
| சுக்கு (புதியது) | ரூ. 12000 |
| சுக்கு(பழையது) | ரூ. 10,100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 10100 |
| கொப்பரை நாடன் | ரூ. 6500 |
| கொப்பரை ராசு | ரூ. 6375 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 6850 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ. 7550 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7200 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 20450 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 29750 |
| ரப்பர் பால் | ரூ. 13575 |
| காப்பி | ரூ. 10700 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 3200 |
| நேந்திரகாய் | ரூ. 2400 |
| இஞ்சி | ரூ. 1000 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஆக.1–

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:–

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,710 | 110.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1190 | 76.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1240 | 78.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1100 | —— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1190 | 75.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,400 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1600 | 110.00 |
| என்.கே.எஸ்பிராண்ட் | ரூ. 1,850 | 120.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,060 | 58.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,570 | 102.00 |
| வனஸ்பதி | | |
| லிஸ்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,260 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1020 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,050 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,050 | – |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.190.00 | அதிகபட்சவிலை | ரூ.260.00 |
| சராசரி விலை | ரூ.169.58 | சராசரி விலை | ரூ.235.78 |
| குறைந்தபட்சவிலை | ரூ.152.00 | குறைந்தபட்சவிலை | ரூ.201.00 |

**பட்டு நூல் ரூ.1,540**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 17,456.00 | 17,456.00 | 17,480.00 |
| ஒரு கிராம் | 2,182.00 | 2,182.00 | 2,185.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 58,410.00 | 62,300.00 | 62,500.00 |
| ஒரு கிராம் | 62.00 | 62.30 | 62.50 |